**கவனிக்க** .- 2025.10.17 ஆந் திகதிய 2459ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ்மொழிமூலம்) மற்றும் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2460 - 2025 ඔක්තෝබර් මස 24 වැනි සිකුරාදා - 2025.10.24

2460ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | 102 |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் ( பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


101- B 82731 - 403 (2025/10)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை

## கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

வழக்கிலக்கம் : டி.ஆர் 696/ 2018
கொழும்பு மாவட்ட
நீதிமன்ற எல்கிசி இல.:23/2023

1994 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கடன் மீள் அறவிட்டுக் கொள்ளும் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் கீழ் மற்றும் அதன் அடிப்படையில் செய்யப்படுகின்ற விண்ணப்பம்

சென்ரல் பினேன்ஸ் கம்பனி பிஎல்சி,
இல. 84, ராஜ வீதி, கண்டி

மற்றும்
நகர அலுவலகம், இல.20. வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

*வழக்காளி*

எதிர்

"த்ரீ சிங்க இன்ஜினியர்ஸ்" எனும் பெயரில் மற்றும் முகவரியில் கூட்டுவியாபாரம் ஒன்றினை நடாத்திச் செல்லப்படுகின்ற,

1. மாம்பிட்டிய ஆரச்சிலாகே துஷார ஷந்தன குமார

2. திசரிந்து திலின விஜயசிங்க

இருவரும்

இல. 27, இராஜகிரிய வீதி, இராஜகிரிய.

*வழக்காளி*

2025 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 19 ஆந் திகதியில்,

இந்த வழக்கின் மேலே குறிப்பிடப்படுகின்ற எதிராளிகளுக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் 2018, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் வழக்காளி நிறுவனத்திற்கு முதலாம் எதிராளியிடமிருந்து ஒன்றாக அல்லது வெவ்வேறாக 2017.11.08 ஆந் திகதிக்கு ரூபா நாற்பத்து ஆறு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து நானூற்று தொண்ணூறு ரூபா பதினான்கு சதம் (ரூபா 4,659,490.14) தொகை மற்றும் குறித்த தொகையினை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை வருடத்திற்கு 16% வட்டி, 1 ஆம் எதிராளியிடமிருந்து ஒன்றாகவோ அல்லது வெவ்வேறாகவோ வழக்குக் கட்டணம் மற்றும் எஸ்கீசி கட்டணம் மற்றும் பிசுக்கால் கட்டணம், ஏல விற்பனைக் கட்டணத்தினை அறவிட்டுக் கொள்வதற்காக 2023, மாச்சு மாதம் 09 ஆந் திகதி என்னால் தடைப்படுத்தப்பட்ட குறித்த வழக்கின் 1 ஆவது எதிராளியினுடைய இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுகின்ற ஆதனத்தில் அவருக்கு உரித்தான அனைத்து உரித்துக்களும் மற்றும் உரிமைகளும்,

2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிக்கு குறித்த ஆதனம் அமைந்த இராஜகிரிய, இராஜகிரிய வீதி, இல. 27 எனும் இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**செலுத்தும் முறை :**
ஏல விற்பனை முடிவடைந்து உடனடியாக கீழே குறிப்பிடப்படுகின்ற செலுத்துகை கொள்வனவாளரினால் எனக்கு செலுத்தப்பட வேண்டியதோடு அனைத்து செலுத்துகைகளும் பணத்தின் மூலமாக மாத்திரம் செலுத்தப்படுவதோடு காசோலைகள் பொறுப்பெடுக்கப்படமாட்டாது.

முழுத் தொகையினை செலுத்தி அன்றைய தினமே பொருட்களை விடுவித்துக் கொள்ள வேண்டும்.

**அட்டணை**

1. Model No.- C 6232A GAP -BED- Serial No.- JM 2335 - Lathe Machine - 01
2. Model No.- C 6232A GAP -BED- Serial No.- JT 0788 - Lathe Machine - 01
3. Lupricatio Points Serial No. - 1700- Milling Machine - 01
4. Drill Machine -Model No.- 2E52-01
5. Shaper Machine Walchand Cooper Model No.- COM 63- 17409( 1972) -01
6. Shaper Machine DMK- MEERA Model No. - KDKM 38- 01
7. Shoting Machine - Buter Shoting Machine -01
8. Ammano Sheets - உயரம் 10 அடி, அகலம் 2.5 அடி - Sheets 41

பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
கொழும்பு.

2025, செத்தெம்பர் 19.

10- 326